தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1972 மார்ச் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்.

சட்டப் பேரவையின் முன்னாள் தலைவர் திரு. என். கோபால மேனன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1952-ம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராகவும் 1955-ம் ஆண்டு முதல் 1956-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவையின் தலைவராகவும் இருந்த திரு. என். கோபால மேனன் அவர்கள் 9—2—1972-ம் நாளன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் வேறு பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தாலும், சென்னை நகர மக்களுடன் நீண்ட காலமாகத் தொடர்புகொண்டு, சென்னையின் துணை மேயராகவும் இருந்தார்கள். மிகுந்த இனிய பண்பும் அன்பும் நிறைந்தவராக விளங்கிய தன்மையையும், அவர் காலத்தில் சட்டப் பேரவையை நடத்திச் சென்ற பாங்கினையும் நல்ல பெற்றியினையும் எல்லோரும் பாராட்டி வந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு பெரியவரின் மறைவுகுறித்து இந்தப் பேரவையின் எல்லாத் தரப்பினருடைய சார்பிலும் என்னுடைய சார்பிலும் இந்த உணர்வுகளை மறைந்த திரு. கோபால மேனன் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் தெரிவிக்கின்றேன்.

"பொன்னானி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1952-ம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் போவையில் உறுப்பினராகவும், 1955-லிருந்து 1956-ம் ஆண்டுவரை சட்டப் பேரவைத் தலைவராகவும்

இருந்த திரு. என். கோபால மேனன் அவர்கள் 9—2—1972-ம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில், அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்க. தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த பெரியவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த மாமன்றம் முற்பகல் **10-15** வரை ஒற்றிவைக்கப்படுகிறது.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் முற்பகல் 10-15 மணிக்குக் கூடியது.

2. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

தமிழ் ஆட்சி மொழி.

*261 **வினு—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்கள் முழுமையும் தமிழை ஆட்சி மொழியாக அமைய காலவரம்பு நிர்ணயிக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை என்று பதில் சொன்னார்கள். தமிழ் அரியாசனத்தில் ஏற வேண்டுமென்ற கொள்கையுடைய இந்தக் காலத்திலே தமிழ் தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்களில் இடம் பெறுமல் போனால் வேறு நல்ல சூழ்நிலை உருவாகாது என்ற